**25.09.2024**

**அ.வ.எண். 202/2012**

**<u>வா.சா.2 ஜனார்த்தனன் ரெட்டியார் அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள அ பதிவேடு மற்றும் எஸ்.எல்.ஆர் 1969 ம் வருடத்திற்குரியது. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 தவிர்த்து வழக்கமாக வழங்கபடும் வருவாய் ஆவணங்களில் ஏதேனும் வெங்கடவரத ரெட்டியார் பெயரில் உள்ளதா என்றால் 1982ல் யு.டி.ஆர் திட்டத்தில் வழங்கப்பட்டது. 1982ம் வருடம் யு.டி.ஆர் திட்டத்தில் பட்டா எனது தகப்பனார் பெயரில் மட்டும் வழங்கபடவில்லை என்றால் சரிதான். யு.டி.ஆர் திட்டத்தில் வழங்கப்பட்ட கூட்டு பட்டா வா.சா.ஆ.13 என்றால் சரிதான். எனது தகப்பனார் 1990ம் வருடம் இறந்துவிட்டார். வா.சா.ஆ.13 வழங்கிய காலத்திலிருந்து எனது தகப்பனார் இறக்கும் வரை எந்த காலத்திலும் எனது தகப்பனார் அது குறித்து எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் 1990ம் வருடம் தாலுக்கா அலுவலகத்தில் மனு கொடுத்தார். ஆனால் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2. மனு கொடுத்த தேதி, மாதம் எனக்கு தெரியாது. அதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் இறந்த பிறகு நான் கூட்டுபட்டா குறித்து மனு ஏதேனும் கொடுத்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன்.

மனு கொடுத்த தேதி, மாதம், வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கின் பிராதுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வெங்கடவரத ரெட்டியார் வாரிசுகளுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டதாக பிராதுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.83/1 ஆனது சர்வே எண்.83/1எ மற்றும் 83/1பி ஆக உட்பிரிவு செய்யபட்டது என்றால் சரிதான்.

3. எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உட்பிரிவு குறித்து எனக்கு எந்த வருடம் தெரியவந்ததது என்றால் 2000ம் வருடத்திற்கு பிறகுதான் தெரியவந்ததது. சர்வே எண்.83/1எ க்கு உட்பிரிவு செய்யப்பட்டு யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் எனது தகப்பனார் வெங்கடவரத ரெட்டியார் பெயரில் வழங்கப்பட்டது. சர்வே எண்.83/1பி க்கு யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. சர்வே எண்.83/1எ க்கு எந்த பக்கம் சர்வே எண்.83/1பி உள்ளது என்றால் மேற்கு பக்கம். சர்வே எண்.83/1எ க்கு கிழக்கு பக்கம் நேமம் கிராம சாலை. சர்வே எண்.83/1எ க்கு வடக்கு பக்கம் காடு உள்ளது. சர்வே எண்.83/1எ க்கு தெற்கு பக்கம் நேமம் கிராம எல்லை.

4. சர்வே எண்.83/1பி க்கு வேறொரு நபர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்ட விவரம் நான் எப்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் 2006ம் வருடம் தெரிந்துக்கொண்டேன். அதுகுறித்து நானோ அல்லது எனது தகப்பனாரோ நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தோமா

என்றால் இல்லை. வெங்கடவரத ரெட்டியார் மகள்களுக்கும் எனக்கு இடையே வாய்மொழிப் பாகபிரிவினை ஏற்பட்டது என்று வா.சா.ஆ.6 ல் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது பூர்வீக சொத்துகள் எதையும் நான் நிறுத்திக் கொள்ளாமல் அனைத்தையும் வா.சா.ஆ.6 முன்னிலைக்கு எனது மனைவி பெயருக்கு எழுதி வைத்தேன் என்றால் சரிதான்.

5. சர்வே எண்.83/1எ வினை எனது மனைவி 2008ம் வருடம் குணசேகர் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். குணசேகரன் கிரையப்பத்திரத்தில் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)